வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 6.10 2024          நேரம் மாலை 6.10 மணி

தலைப்புச் செய்திகள்

நவராத்திரி பண்டிகையின் 4-ஆவது நாளான இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி குஷ்மாண்டா தேவியை வழிபட்டார்.

இந்திய விமானப்படையின் 92-ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு விமான சாகச நிகழ்ச்சிகள் இன்று சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்றது.

மாலத் தீவு அதிபர் டாக்டர் முகமத் முய்சு 5 நாள் அரசு முறைப் பயணமாக இந்தியா வந்துள்ளார்.

புதுச்சேரியில் தீபாவளி பண்டிகையை ஒட்டி, அனைத்து ரேஷன்கார்டுகளுக்கும், 10 கிலோ அரிசி, 2 கிலோ சர்க்கரை, வழங்கப்படும் என்று, முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

*நவராத்திரி*

நவராத்திரி பண்டிகையின் 4-ஆவது நாளான இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி குஷ்மாண்டா தேவியை வழிபட்டார். சமூக ஊடகப் பதிவில் நவராத்திரி வாழ்த்து தெரிவித்த பிரதமர் குஷ்மாண்டா தேவியின் அருளால் அனைவரின் வாழ்விலும் மகிழ்ச்சி பொங்க வேண்டுமென்று

தாம் விரும்புவதாக பதிவிட்டு தேவி மீதான ஒரு துதிப்பாடலையும் பிரதமர் வெளியிட்டார்.

விமானப் □டை

இந்திய விமானப்படையின் 92-ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு விமான சாகச நிகழ்ச்சிகள் சென்னை மெரினா கடற்கரையில் இன்று காலை 11 மணிக்கு தொடங்கியது. இந்நிகழ்ச்சியை தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், மாநில அமைச்சர்கள், இந்திய விமானப்படை முதன்மை ஏர் கமாண்டோ அமர்பிரித் சிங், மற்றும் முப்படைகளின் உயர் அதிகாரிகள் பார்வையிட்டனர். இந்த சாகச நிகழ்ச்சியில் இந்திய விமானப் படையின் செட்டாக், ரபேல், டகோட்டா, ஹார்வேர்டு, எம்ஜஜி, பொசைடன்-31, ஹெர்குலஸ் ரக விமானங்களும், ஜாக்குவார், தேஜஸ், சுகோய் ரக விமானங்களும், ஈடுபடுத்தப்பட்டன. பாண்டியன், சரண், மகாபலி, சூர்யகிரண் உள்ளிட்ட சாகசங்களை போர் விமானங்கள் நிகழ்த்திக் காட்டின. போர் வீரர்கள் ஹெலிகாப்டர்களில் இருந்து இறங்கி பயங்கரவாதிகள் பதுங்கி உள்ள இடங்களை தகர்த்து அவர்களை முறியடிப்பது போன்ற செயல் விளக்கமும் இந்த சாகச நிகழ்ச்சியில் செய்து காண்பிக்கப்பட்டது. விமான சாகச நிகழ்வுகளுக்கு பல்லவா, காவிரி, காஞ்சி, நடராஜ், நீலகிரி, கார்த்திகேயா, தனுஷ், மெரினா, சோழா உள்ளிட்ட பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன.

ஜோஷி

புதுப்பிக்க தக்க எரிசக்தி மற்றும் நிலையான வளர்ச்சித் துறையில் இந்தியாவின் சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் மத்திய எரிசக்தி துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி ஜெர்மனிக்கு 3 நாள் பயணத்தை நாளை மேற்கொள்கிறார். அக்டோபர் 7 முதல் 8-ஆம் தேதி வரை ஹாம்பர்க் நிலைத் தன்மை மாநாட்டில் அவர் கலந்து கொள்கிறார். மேலும் ஜெர்மனி, இங்கிலாந்து அமைச்சர்கள் மற்றும் பிற மூத்த அதிகாரிகளுடன் அவர் இருதரப்பு சந்திப்புகளை நடத்த உள்ளார். தொடர்ந்து நிலையான வளர்ச்சி, பசுமை ஹைட்ரஜன், குறைந்த செலவு நிதி மற்றும் புதுப்பிக்கதக்க எரிசக்தி மதிப்பு சங்கிலி கூறுகள் அனைத்திலும் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து அவர் ஆலோசனை நடத்த உள்ளார். பசுமை கப்பல் போக்குவரத்து குறித்த இந்தியாவின் நிலைப் பாட்டையும் கார்பன் நீக்கம் செய்வதில் பசுமை ஹைட்ரஜனின் பங்கையும் அமைச்சர் இம்மாநாட்டில் வலியுறுத்த உள்ளார். இந்தியா-ஜெர்மனி இடையேயான இருதரப்பு உறவுகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி, சிறப்பு முக்கியத் துவம் அளித்து வருகிறார். இந்தியாவில் இந்த மாதம் இந்தியா மற்றும் ஜெர்மனி தலைவர்கள் இடையேயான ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது குறிப்பிடத் தக்கது.

*நிர்மலா*

பலதரப்பு வளர்ச்சி வங்கிகளை வலுப்படுத்துவது தொடர்பாக ஜி-20 நிபுணர் குழுவின் 30 பரிந்துரைகளில் 27 பரிந்துரைகளை உலக வங்கி பரிசீலித்ததற்கு மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் பாராட்டு தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் பேராசிரியர் நிக் ஸ்டெர்னுடனான தனது உரையாடலின் போது காலநிலை நிதி மற்றும் வளர்ந்த நாடுகளில் இருந்து வளரும் நாடுகளுக்கு தொழில் நுட்ப பரிமாற்றம் ஆகியவை லட்சிய காலநிலை நடவடிக்கையை செயல்படுத்துவதற்கு இன்றியமையாதவை என்று அவர் வலியுறுத்தினார். பேராசிரியர் நிக் ஸ்டெர்ன் இந்தியாவின் ஜி-20 தலைமையின் போது நிறுவப்பட்ட பலதரப்பு வளர்ச்சி வங்கிகளை வலுப்படுத்துவதற்கான நிபுணர் குழுவின் உறுப்பினராக உள்ளார்.

*ராம்நாத் கோவிந்த்*

ஒரே நாடு-ஒரே தேர்தல் தொடர்பான உயர்மட்டக் குழுவிற்கு தலைமை தாங்கிய முன்னாள் குடியரசு தலைவர் திரு ராம்நாத் கோவிந்த், விக்சித் பாரத்தை நோக்கிய தனது நிலையான பயணத்தில் ஒரே நேரத்தில் தேர்தல்களை மேற்கொள்வதன் மூலம் இந்தியா பெரிதும் பயன் அடையும் என்று கூறி உள்ளார். புதுடெல்லியில் 30-ஆவது லால்பகதூர் சாஸ்திரியின் நினைவு தினத்தில் உரை ஆற்றிய போது அவர் இவ்வாறு கூறினார். ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள் சிறந்த நிர்வாகம்,

கொள்கையில் ஸ்திரத் தன்மை, சமூக ஒற்றுமை, பொருளாதார வளர்ச்சி மற்றும், மேம்பட்ட உலகளாவிய போட்டித் தன்மை போன்ற நீண்டகாலப் பலன்களை கொண்டிருக்கும் என்று திரு கோவிந்த் மேலும் கூறினார். உள்ளடக்கிய மற்றும் வளமான எதிர்காலத்திற்கான அடித்தள சீர்திருத்தமாக இந்த ஒரே தேர்தல் கொள்கை இருக்கும் என்று அவர் கூறினார்.

*மூளை வளர்ச்சி*

உலக மூளை வளர்ச்சி குறைபாடு தடுப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. மத்திய அரசின் மாற்றுத் திறனாளிகளை அதிகாரப்படுத்தும் துறை இன்று நாடு முழுவதும் பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது. இந்நாளை ஒட்டி, மூளை வளர்ச்சி குறைபாடு தொடர்பாக மக்கள் மத்தியில் நிலவும் மூட நம்பிக்கைகளை களையும் விதமாக இந்நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மனவளர்ச்சி குன்றியவர்கள் மாற்றுத் திறனாளிகள் என்ற அடிப்படையில் அவர்களுக்கான திறமைகளைக் கண்டறிந்து அதனை ஊக்கப்படுத்துவதற்கு வழிவகுக்க வேண்டும் என்று உலக மூளை வளர்ச்சி குன்றியோர் நலச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்த வகை மாற்றுத் திறனாளிகளை ஊக்கப்படுத்தும் விதமாக அவர்களது

திறமைகளைப் பாராட்டி நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*மாலத் தீவு அதி□ர்*

மாலத் தீவு அதிபர் டாக்டர் முகமத் முய்சு 5 நாள் அரசு முறைப் பயணமாக இந்தியா வந்துள்ளார். இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அவரை சந்திக்க உள்ளார். நாளை காலை குடியரசு தலைவர் மாளிகையில் மாலத் தீவு அதிபருக்கு சம்பிரதாய வரவேற்பு அளிக்கப்பட உள்ளது. மேலும் இருதரப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடியுடன் அவர் பேச்சு வார்த்தை நடத்த உள்ளார். இந்த சந்திப்பைத் தொடர்ந்து பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாலத் தீவு அதிபர் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவை நாளை மாலை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த உள்ளார். அவரது இந்த பயணத்தின் போது ஆக்ரா, பெங்களுர், மற்றும் மும்பை ஆகிய இடங்களுக்கு செல்ல உள்ளார்.

*அஸ்வினி வைஷ்ணவ்*

உலகம் முழுவதற்கும் செமி கண்டக்டர் உற்பத்தி மையமாக இந்தியா எதிர்காலத்தில் திகழும் என்று மத்திய மின்னணு மற்றும் தகவல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறி

உள்ளார். பெங்களுரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் அடுத்த ஆண்டின் முதல் பகுதியில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட சிப் வெளியிடப்படும் என்று தெரிவித்தார். அசாமில் டாடா நிறுவனத்தின் மூலம் இதற்கான ஒரு மையம் அமைக்கப்பட்டுள்ளதாக கூறினார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையின் அடிப்படையில் இந்தியாவில் சிப் உற்பத்திக்கான முதலீடுகள் அதிக அளவில் எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிட்டார். டிஜிட்டல் இண்டியா திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக சாதாரண மக்களும் அதிநவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார். 2026-ஆம் ஆண்டில் 66 பில்லியன் டாலர் அளவிற்கு செமி கண்டக்டர் உற்பத்தி சந்தை உயரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் கூறினார்.

தீ□ாவளி

புதுச்சேரியில் தீபாவளி பண்டிகையை ஒட்டி, அனைத்து ரேஷன்கார்டுகளுக்கும், 10 கிலோ அரிசி, 2 கிலோ சர்க்கரை, இலவசமாக வழங்கப்படும் என்று, சட்டப்பேரவை அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார். இதற்காக 1.45 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறிய முதலமைச்சர்

ரேஷன் பொருட்களை வீடு, வீடாகச் சென்று மக்களுக்கு வழங்குவது தொடர்பாக அரசு ஆலோசித்து வருவதாக கூறினார். தீபாவளிக்கு முன்பு அனைத்து ரேஷன் கடைகளையும் திறக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், ரேஷன் கடை ஊழியர்களுக்கு 1 மாத சம்பளம் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

*திரைப்பட விருதுகள்*

2022-ஆம் ஆண்டிற்கான தேசிய திரைப்பட விருதுகளை குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, புதுடெல்லியில் உள்ள விஞ்யான் பவனில் நாளை மறுநாள் வழங்க உள்ளார். திரைப்படத் துறையில் வாழ்நாள் சாதனையாளருக்கு வழங்கப்படும் தாதா சாகேப் பால்கே விருது இந்தி திரைப்பட நடிகர் திரு மிதுன் சக்கரவர்த்திக்கு வழங்கப்படுகிறது. பொன்னியின் செல்வன் தமிழ் திரைப்படத்தின் தயாரிப்பாளர், இயக்குநர் திரு மணிரத்னம், இசை அமைப்பாளர் திரு ஏ ஆர் ரகுமான், ஒலி-ஒளி பதிவாளர்கள் ரவிவர்மன், ஆனந்த் கிருஷ்ணமூர்த்தி ஆகியோருக்கு விருது வழங்கப்படுகிறது. சிறந்த நடிகைக்கான விருது திருச்சிற்றம்பலம் திரைப்படத்தில் நடித்த நடிகை நித்யாமேனனுக்கு வழங்கப்படுகிறது.

*ஹாக்கி*

மலேசியாவில் நடைபெறும் 12-ஆவது சுல்தான் ஆப் ஜொகூர் கோப்பை போட்டியில் பங்கேற்க உள்ள 18 பேர் கொண்ட ஆண்கள்

அணியை இந்திய ஹாக்கி அணி இன்று அறிவித்துள்ளது. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைமை பயிற்சியாளர் திரு பி ஆர் ஶ்ரீதேஷ் அணிக்கு பொறுப்பேற்பார். திரு அமீத்அலி கேப்டனாகவும், திரு ரோஷித் துணைத் தலைவராகவும் பணியாற்றுகின்றனர். இம்மாதம் 19-ஆம் தேதி ஜப்பானுக்கு எதிராக இந்தியா தனது போட்டியை தொடங்குகிறது. தொடர்ந்து 20-ஆம் தேதி பிரிட்டனுடனும், 22-ஆம் தேதி மலேசியாவுடனும் களம் காண்கிறது.

*வானிலை*

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, நீலகிரி, கோவை, திருப்பூர், நாமக்கல் மாவட்டங்களில் இன்று மிககன மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், தென் தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இடி,மின்னலுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

*கிரிக்கெட்*

இந்தியா-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையேயான முதலாவது சர்வதேச 20-20 கிரிக்கெட் போட்டி குவாலியரில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது. 3 போட்டிகள் கொண்ட இத்தொடரின் 2-ஆவது

போட்டி வரும் புதன் கிழமையும், இறுதிப் போட்டி வரும் சனிக்கிழமையும் நடைபெற உள்ளது.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

நவராத்திரி பண்டிகையின் 4-ஆவது நாளான இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி குஷ்மாண்டா தேவியை வழிபட்டார்.

இந்திய விமானப்படையின் 92-ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்டு விமான சாகச நிகழ்ச்சிகள் இன்று சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்றது.

மாலத் தீவு அதிபர் டாக்டர் முகமத் முய்சு 5 நாள் அரசு முறைப் பயணமாக இந்தியா வந்துள்ளார்.

புதுச்சேரியில் தீபாவளி பண்டிகையை ஒட்டி, அனைத்து ரேஷன்கார்டுகளுக்கும், 10 கிலோ அரிசி, 2 கிலோ சர்க்கரை, வழங்கப்படும் என்று, முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------------

துபாயில் நடைபெறும் ஐசிசி மகளிர் உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியில் இன்று பிற்பகல் தொடங்கிய ஆட்டத்தில் இந்திய அணி பாகிஸ்தான் அணியை எதிர்கொள்கிறது. டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி பேட்டிங்கை தேர்வு செய்துள்ளது.